ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2442/31 - 2025 ජූනි මස 24 වැනි අඟහරුවාදා - 2025.06.24

2442/31 ஆம் இலக்கம் - 2025 ஆம் ஆண்டு யூன் மாதம் 24 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி III - காணிகள்

## காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

எனது இல.: MO/DS/LAN/06/01/41.
காணி அமைச்சின் இல.: 4-3/4/2015/D/66.

இலங்கை இராணுவத்தின் கும்புக்கனை, 121 ஆம் காலால் படைத் தலைமையகத்துக்கு தேவையான கீழ்க் காணும் காணியை எடுத்துக்கொள்ள அரசாட் சியார் எண்ணியிருக்கிறார்கள் என்பதை காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உட் பிரிவின் கீழ், நான் இத்தால் அறிவிக்கின்றேன்.

**எடுத்துக் கொள்ளவிருக்கும் காணியின் விபரம்:**

ஊவா மாகாணத்தின் மொணராகலை மாவட்டத்தில் மொணராகலை பிரதேச செயலகத்தின் 131 A, கும்புக்கன கிராம அலுவலர் பிரிவின் கவுடாவ (பிரிவின்) கிராமத்தில் அமைந்துள்ள மொணராகலை நில அளவையாளர் நாயகத்தினால் தயாரிக்கப் பட்டுள்ள கடத்திரல் வரைபட இல. 720106, வலய இல. 03, பத்திர இல. 01 மற்றும் 2025.03.20 ஆந் திகதியிடப்பட்ட அடிப்படை வரைபடத்தில் காட்டப் பட்டுள்ள காணித்துண்டுகளின் விபரங்கள் பின்வரு மாறு:

01. **துண்டு இல. 01**
காணியின் பெயர்: பரவில வத்த; உரிமை கோருபவர்: காணிச் சீர்திருத்த ஆணைக்குழு; விஸ்தீரணம்: 4.7844 ஹெக்டயார்.

02. **துண்டு இல. 04**
காணியின் பெயர்: பரவில வத்த; உரிமை கோருபவர்: காணிச் சீர்திருத்த ஆணைக்குழு; விஸ்தீரணம்: 0.3220 ஹெக்டயார்.

03. **துண்டு இல. 06**
காணியின் பெயர்: பரவில வத்த; உரிமை கோருபவர்: காணிச் சீர்திருத்த ஆணைக்குழு; விஸ்தீரணம்: 0.0687 ஹெக்டயார்.


*இவ் அதிவிசேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

மேற்குறித்த காணிக்கு உரித்துப் பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்து மூலம் அதிகார மளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2025 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 24 ஆந் திகதி மு.ப. 10.00 மணிக்கு மொணராகலை பிரதேச செயலகத்தில் என் முன் வெளிப்படுத்தும்படியும் மேலும், அக் காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நட்டஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும் நட்ட ஈட்டுத் தொகையையும் அத்தொகை கணிக்கப்பட்ட விதத்தையும் 2025 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 17 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் இருபிரதிகளாக எனக்கு அறிவிக்கும் படியும் இத்தால் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

டபிள்யூ. டி. பீ. சீ. சமரசேக்கர,
பிரதேச செயலாளர்,
மொணராகலை.

பிரதேச செயலகம்,
மொணராகலை.
2025, யூன் 18.

EOG 06 - 0245

---

திருத்தம்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

எனது இல.: 4/1/5/16.
காணி அமைச்சின் குறிப்பு இல.: LD5/2007/D/223.

மேற்படி தலைப்பின் கீழ் 2012 ஆம் ஆண்டு சனவரி மாதம் 06 ஆந் திகதிய 1739/35 ஆம் இலக்க, இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதி விசேட வர்த்தமானி அறிவித்தலில் பிரசுரிக்கப்பட்ட காணி எடுத்தற் சட்டத்தின் 7 ஆம் பிரிவின் கீழ் விடுக்கப்பட்ட அறிவித்தலில் வ.இல.கு 2267 இன் துண்டு இலக்கம் 01 இனைக் கொண்ட காணிப் பகுதியின் விஸ்தீரணம் 0.5672 ஹெக்டயார் ஆக காணி விபரப் பட்டியலின் 1 A ஆம் பக்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. அதனை நீக்கிவிட்டு காணி யின் விஸ்தீரணம் 0.5572 ஹெக்டயார் ஆக பதிலீடு செய்து அந்த அறிவித்தல் பின்வருமாறு திருத்தப்பட் டுள்ளது என அறியத்தரப்படுகிறது.

| நீக்கப்பட்ட காணி அளவு | நீக்கப்பட்ட காணி அளவிற்குப் பதிலாக மாற்றீடு செய்யப் பட்ட காணி அளவு |
|---|---|
| 0.5672 ஹெக்டயார் | 0.5572 ஹெக்டயார் |

டபிள்யூ. எஸ். சேனாதிஸ்ஸ,
பிரதேச செயலாளர் மற்றும்
காணி எடுத்தல் உத்தியோகத்தர்,
குருநாகல்.

பிரதேச செயலகம்,
குருநாகல்.
2025, யூன் 20.

EOG 06 - 0246

---

திருத்தம்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

எனது இல.: 4/1/1/29.
காணி அமைச்சின் குறிப்பு இல.: 4-3/7/2016/HW/125.

மேற்படி தலைப்பின் கீழ் 2020 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 04 ஆந் திகதிய 2204/26 ஆம் இலக்க, இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதி விசேட வர்த்தமானி அறிவித்தலில் பிரசுரிக்கப்பட்ட காணி எடுத்தற் சட்டத்தின் 7 ஆம் பிரிவின் கீழ் விடுக்கப்பட்ட அறிவித்தலில் ஆ.வ.கு 2433 இன் துண்டு இலக்கம் 51 இனைக் கொண்ட காணிப் பகுதி யின் விஸ்தீரணம் 0.0048 ஹெக்டயார் ஆக 21 A ஆம் பக்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. அதனை நீக்கிவிட்டு காணியின் விஸ்தீரணம் 0.048 ஹெக்டயார் ஆக பதிலீடு செய்து அந்த அறிவித்தல் பின்வருமாறு திருத்தப்பட்டுள்ளது என அறியத்தரப்படுகிறது.

| நீக்கப்பட்ட காணி அளவு | நீக்கப்பட்ட காணி அளவிற்குப் பதிலாக மாற்றீடு செய்யப் பட்ட காணி அளவு |
|---|---|
| 0.0048 ஹெக்டயார் | 0.048 ஹெக்டயார் |

டபிள்யூ. எஸ். சேனாதிஸ்ஸ,
பிரதேச செயலாளர் மற்றும்
காணி எடுத்தல் உத்தியோகத்தர்,
குருநாகல்.

பிரதேச செயலகம்,
குருநாகல்.
2025, யூன் 19.

EOG 06 - 0247

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் அச்சிடப்பட்டது.